**யட்டிநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு யட்டிநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த 32 காணித் துண்டுகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு உரித்து கையளிக்கப்படாத ரூபா 8,369,000 பெறுமதியான 04 மோட்டார் வண்டிகள் தொடர்பாக கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான கெப் வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது உடன்படிக்கை செய்யப்படாத 26 நிர்மாண வேலைகளில் ரூபா 10,700,000 தொகையான மதிப்பிடப்பட்ட பெறுமதியொன்று கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 61,249 பெறுமதியான 02 குப்பை வண்டிகள் இயந்திர மற்றும் பொறிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 56,776 பெறுமதியான 04 பேர்ச் பிரின்டர்கள் அலுவலக உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) சபையினால் வழங்கப்பட்ட கடன்தொகையை பயன்படுத்தி ஊழியர்களால் தனிப்பட்ட ரீதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 8,510 பெறுமதியான 13 மிதி வண்டிகள் மோட்டார் மற்றும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஏ) சபைக்குச் சொந்தமான சியாம்பலாகொட கால்நடைப் பண்ணையில் 05 மாடுகளினதும் 02 ஆடுகளினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2017 யூலை 12 ஆந் திகதிய நி.பி 104(4) கணிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் உழவு இயந்திரத்திற்கும் டேலருக்கு ஏற்பட்ட ரூபா 1,061,065 ஆன நட்டம் மற்றும் அதற்காக காப்புறுதியிலிருந்து வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்த ரூபா 700,000 ஆன காப்புறுதி இழப்பீடு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நூலகப் புத்தக கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 5,293,682 ஆக இருந்த போதிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அம்மீதி ரூபா 5,300,733 ஆக இருந்தமையால் ரூபா 7,051 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 80,763,558 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருட காலத்திற்கு மேற்பட்ட கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,396,903 ஆக இருந்தது. 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்கு மீதிகளில் கூட்டுத்தொகை ரூபா 31,845,892 ஆக இருந்ததுடன், 2018 ஏப்ரல் 26 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 78,736,012 ஆன மீதியொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 44,346,886 செலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதியில் 05 ஆண்டு காலம் கடந்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,471,471 ஆக இருந்தது. 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய நிலுவை கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,531,370 ஆக இருந்ததுடன், 2018 யூன் 21 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 43,144,881 ஆன மீதியொன்று மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,237,687 தொகையான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | ---------------------------------------------- | ------------ | -------------------------- |
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் பிரதேச சபை (சட்டத்தின் 52 ஆம் பிரிவு | ---- | மீளாய்வாண்டின் போது பிரதேச சபைக்கு 48 அனுமதியற்ற நிர்மாணங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அதில் 41 தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 3,647,214 | 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 120 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த நிர்மாண நிறுத்திவைத்தல்கள் வைப்புக் கணக்கின் மேலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு
-------------------------

### 2.1 நிதி விளைவுகள்
------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 42,381,202 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 40,113,445 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்
----------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

2017 2016

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 4,780,560 | 4,833,422 | 5,086,060 | 3,534,914 | 4,092,000 | 5,014,228 | 5,122,277 | 3,937,504 |
| (ii) | வாடகை | 240,000 | 87,000 | 87,000 | -- | 220,000 | 107,750 | 107,750 | -- |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 2,450,000 | 2,268,350 | 2,268,350 | 11,145 | 1,950,500 | 1,948,400 | 1,948,400 | 11,145 |
| (iv) | ஏனைய வருமானம் | 49,758,520 | 40,494,541 | 19,449,172 | 65,549,527 | 36,342,600 | 46,660,533 | 48,446,951 | 44,375,375 |
| | மொத்தம் | 57,229,080 | 47,683,313 | 26,890,582 | 69,095,586 | 42,605,100 | 53,730,911 | 55.625,378 | 48,324,024 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து 2016 திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவை ரூபா 48,324,024 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு அப்பெறுமதி ரூபா 69,095,586 ஆக இருந்த காரணத்தினால் அந்நிலுவை வருமானங்களின் அதிகரிப்பு 43 சதவீதமாக இருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

(அ) 10 ஆண்டுகளுக்கு முன்னிருந்து பட்டியலிடப்பட்டு வரும் அரசாங்க நிறுவனங்களில் இருந்து அறவிடப்படும் ரூபா 872,648 ஆன வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 124 தனியார் ஆதன உரித்தான வீதவரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீதவரி ரூபா 583,460 தொகை 02 வருடங்களுக்கும் 12 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 557,400 ஆன முச்சக்கர வண்டிக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,096,882 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 63,549,527 ஆக இருந்ததுடன் இம்மீதிகளிலிருந்து 2018 யூன் 20 ஆந் திகதி வரையிலும் நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 69,336 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும்

கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) நிதிஏற்பாடுகளை செலவிடாமை**

மீளாய்வாண்டின் பொது சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செலவிடும் போது 02 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 310,000 தொகை நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமல் நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 02 செலவின விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,250,000 இலிருந்து ரூபா 701,690 செலவிடப்பட்டமையால் நிதிஏற்பாடு 16 சதவீதம் முதல் 61 சதவீதம் வரை குறைவாக மட்டத்திலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 85(அ), (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படாமல், பேராதனை நகரில் அமைந்துள்ள பொது மலசலகூடம் வருடக் கணக்காக முறையாக பராமரிக்காமையால் சுகாதாரத்திற்கு பாதகமான உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது உள்ளூராட்சி அமைச்சினால் பிரதேச சபை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 ஆன நிதியேற்பாடு தற்பொது பொது மலசலகூட பராமரிப்பிற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளை பயன்படுத்தி மலசலகூட பராமரிப்பு இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவ**

பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 5 தொன் அளவிலான கழிவுப்பொருள் கடுகண்ணால நகர சபையின் 2.5 தொன் கழிவுப்பொருள் கிரிமிட்டியாவ கழிவுப்பொருள் தொகுதியில் சேகரிக்கப்பட்டு அரை வாயு அங்குல முறைமையின் கீழ் காபன் உர உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2018 மே 15 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் பிரகாரம் எவ்வித நடைமுறையொன்று இல்லாமல் நிலம் பூராக ஆங்காங்கே கழிவுப்பொருள் இடப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் தொகுதி முழுவதும் நீர் நிரம்பியிருந்தது.

(ii) கழிவுப்பொருட்களை வெளியேற்றப்படும் காணி பிரதேச சபைக்கு சொந்தமான காணியொன்றாக இல்லாதிருந்ததுடன் காணியின் சரியான உரித்து இனங்காணப்பட்டு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) சேதன பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் முறையான நடைமுறையொன்றும் போதியளவில் இடம்பெறாமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக சபை அறிந்து இருக்காத காரணத்தினால் அந்நோக்கங்களை உலகலாவிய குறிகாட்டிகள் ஊடாக

சபை அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதார எழுச்சி என்பவற்றிற்காக நீண்டகாலத் திட்டமொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

............................................................

(அ) மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் உரிய 23 சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 2,038,975 ஆன வருமானம் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படும் ரூபா 473,640 ஆன நானாவித கடன்பட்டோர் மீதி மற்றும் 2010 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் ஓய்வூதிய கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,900 ஆன மீதியொன்று இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

--------------------------------------------------

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கைக்கு இடையே 16 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) ஓய்வுபெற்ற, வேலையை விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் அறவிடுவதற்கு இருந்த ரூபா 322,453 ஆன ஊழியர் கடன் மீதியொன்றும் 06 மாதங்களுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

..................................................................

(அ) பிரதேச சபையால் பேணிச் செல்லப்பட்டிருந்த வீதி பதிவேடு வருடக் கணக்கில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான சியம்பலாகொட வேலைத்தளத்திற்கு அருகே 02 மாடுகளுடனும் 07 ஆடுகளுடன் கூடிய சிறிய கால்நடை பண்ணை திட்டவட்டமான நோக்கொன்று இல்லாமல் பேணப்பட்டு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைக்கு சொந்தமான 02 கடைகள் 2006 ஆம் ஆண்டு முதல் மற்றுமொரு கடை 2016 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தன.

(ஈ) 05 வருடங்களுக்கு ஒருமுறை புதிய வீதவரி மதிப்பீடொன்று செயற்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் 2006 ஆம் ஆண்டின் வீத வரி மதிப்பீடு அடிப்படையில் 2017 ஆம் ஆண்டிலும் வீதவரிக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

(உ) 2013 ஆம் ஆண்டில் பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் 05 பிரதேசங்கள் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக இனங்காணப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை அப்பிரதேசத்தில் ஆதனங்களுக்காக வீதவரி அறவிடுவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற / குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

(அ) ரூபா 575,716, பெறுமதியான 520 G1 குழாய்கள் பாதுகாப்பற்ற வகையில் இயற்கை ஆபத்துக்களுக்கு உட்பட்டும் விதத்தில் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத ரூபா 1,217,500 பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் ரூபா 564,000 பெறுமதியான 04 டேலர்கள் எடுக்கப்படாமல் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(இ) ஓட்ட நிலைமையில் காணப்படும் ரூபா 3,365,800 பெறுமதியான 02 வாகனங்கள் ஓராண்டிற்கு முன்னிருந்து ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன.

**3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 987,000 பெறுமதியான டிராக்டரொன்றும் டேலரும் 2011 ஆம் ஆண்டின் போது விபத்திற்குட்பட்டு முழுமையாக சேதமடைந்திருந்தன. சேதமடைந்த டிராக்டரை காப்புறுதிக் கம்பனிக்கு கையேற்று ரூபா 700,000 இழப்பீடாக வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் 2018 மே 15 ஆந் திகதி வரை அப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 பெறுகை**

**பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டின் போது ரூபா 58,953,063 ஆன மூலதன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1995 மார்ச் 15 ஆந் திகதிய 08/01/38 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் சுற்றறிக்கையின் (1) ஆம் பந்தியின் பிரகாரம் திட்டமிடல் குழு கடமை நேரத்திற்கு புறம்பாக நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கடமைக்காக சமூகமளித்ததாக குறிப்பிடப்பட்ட 05 உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு நாளும் வெளியேறுவதை குறிப்பிடாமையால் கடமை நேரத்திற்கு பின்னர் திட்டமிடல் குழுவிற்காக சமூகமளித்ததை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. அதன் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 47,000 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினகங்கள் மற்றும் உள்ளவாறான வருமானங்கள் செலவினங்களுக்கு இடையில் 02 வருமான விடயங்களில் 18 சதவீதம் முதல் 102 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு பல்வேறு விடயங்களின் கடமைக்காக கையளிக்கப்பட்டிருந்த காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை சுயாதீனமாகவும் போதியளவும் நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிருவாகம் | i. நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | ii. முன்னேற்றமடைந்த பிரதேசங்களில் வீதவரி அறவிடப்படாமை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | i பதிவேடுகள் முறையற்ற வகையில் பேணிச்செல்லல் |
| | | ii. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| | | iii. உரித்து உறுதிப்படுத்தப்பாடமை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் | i உடன்படிக்கை செய்யப்படாத நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் |
| | | ii. பழைய கடன்பட்டோர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமை |
| | | iii. பழைய நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டை செலவிடாமை |